
காஞ்சி

# நாடு



ஆணையர்
தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
மற்றும் வரலாற்று ஆராய்ச்சி
10 மே 1994
ஆவணக் காப்பகம்
சென்னை-600 008

## எப்படி

- கவிஞர் அருள்செல்வன் -

தார் ரோடு போடுகின்ற
கார்மேக நிறமேனி
மனிதர்களே,
தண்ணீர் தட்டுப்பாடு
தலைவிரித்தாடும் நேரத்தில்
உங்கள் மேனியில் மட்டும்
எப்படி
இத்தனை நீர் வெள்ளம் ?

2276
PC 03378
JL
ᗰ2112, N92KN
N94.3.5
217219.

சிறப்பாசிரியர் :
டாக்டர். சி.என்.ஏ. பரிமளம்.

## அறிக்கை

# 'காஞ்சி நாடு'


வெளியாகும் இடம் : 7, அவின்யு சாலை, சென்னை-600 034

வெளியிடும் நாட்கள் : திங்கள் ஒருமுறை

அச்சிடுவோரின் பெயர் : C. R. கண்ணன்

இனம் : திராவிடன்

முகவரி 27, பாளையக்காரன் குறுக்குத் தெரு
கோடம்பாக்கம், சென்னை-600 024

ஆசிரியர் : மலர்வண்ணன் அண்ணாதுரை

வெளியிடுவோரின் பெயர்:

முகவரி : 7, அவின்யூ சாலை, நுங்கம்பாக்கம்
சென்னை-600 034

இனம் ; திராவிடர்


என் அறிவிற்கும், நம்பிக்கைக்கும் நன்கு தெரிந்தமட்டில், மேலே கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் யாவும் உண்மையானவை என்று மலர்வண்ணன் அண்ணாதுரையாகிய நான் அறிவிக்கிறேன்.

7—5—94 (ஒப்பம்) மலர்வண்ணன் அண்ணாதுரை

(வெளியிடுவோர்)

# காஞ்சி நாடு

திருவள்ளுவர் ஆண்டு 2025 7—5—94 விடை (வைகாசி)

பேரறிஞர் அண்ணா இலக்கியப் பேரவையின் திங்கள் இதழ்

நண்பர்களே,

சென்ற இதழ்தலையங்கத்தில் நமது இதழ் நடத்துவதில் உள்ள இடர்பாடுகள் பற்றி எழுதியிருந்தேன் இப்போது அடுத்த இதழ் வருமா எனும் கேள்விகுறி இதழ் நடத்த உதவுவேன் என்று சொன்ன வர்கள் எண்ணிக்கை மிகப்பெரிது. அதைவிடபெரியது எனக்கு அறிவுரைகள் வழங்கியோர் எண்ணிக்கை இதழ் இப்படி இருக்கவேண்டும் என்றும், விளம்பரம் வாங்கித் தருவேன். வாழ்நாள் உறுப்பினர்கள் சேர்த்துத் தருவேன் என்று சொன்ள என் நண்பர்களின் எண்ணிக்கையும் மிகப்பெரியது. ஆனால் இது வரை அவர்கள் செய்த உதவியோ; எண்ணிப்பார்க்கிறேன், வியப்பும் வேதனையும் தான் மிஞ்சுகிறது ஏன் என்று என்னையே கேட்டுப் பார்த்துக்கொள்கிறேன் ஒவ்வொருவரும் ஒரு அணியில்! இவரைப்பார்த்தால் அவருக்கு மனத்தாங்கல் அவரைப்பார்த்தால் இவருக்கு மனத்தாங்கல். நீங்கள் யார் பக்கம் என்று என்னை பார்த்து கேட்பதிலேயே அவர்கள் காலத்தை கழித்துக் கொண்டிருக்கின்றனர். அண்ணாவின் கொள்கைகளை பரவசெய்வோம் என்பது அவர்களின் வாய்ப்பேச்சு, செயல்முறை அல்ல என்பதை புரிந்து கொண்டேன்: ஆனால் அண்ணாவின் பற்றாளர்கள், உண்மையாக அண்ணாவை மனதில் ஏற்றி வைத்திருப்பவர்கள், என்பணியின் தூய்மையை அறிந்தவர்கள், அண்ணாவின் பெயரைச் சொல்லி அரசியலில் ஆதாயம் தேடாதவர்கள் அண்ணாவின் கொள்கை வழி நடப்பவர்களை பாராட்டுபவர்கள், அண்ணாவின் வழியை மறந்து போகிறவர்களை—அவர்கள் எவ்வளவு பெரியவராக தன்னை நினைத்துக் கொண்டிருந்தாலும் கண்டிப்பவர்கள், என்கிற தொகையோ குறைவு! இதழ் வளர்ச்சிக்கு இதுவரை உதவிய அவர்களுக்கு என் இருகரம் கூப்பிய நன்றி. சில நண்பர்கள் நீங்கள் ஏதாவது ஒரு அணியில் சேர்ந்தால் இதழ் வளர்ச்சி

மனித மேம்பாடே என் இயக்கம்!
தோழமையே என் மேடை!

—அறிஞர் அண்ணா

நன்றாக இருக்கும் என எனக்கு அறிவுரை வழங்கினர். ஏதாவது ஒரு அணியில் இணைந்தால், அவர்கள் செய்வதை எல்லாம் நான் வழி மொழிந்து வேண்டுமே, கண்டித்தால் துரோகியாக்கப் படுவேன் என்றதும் அவர்கள் வாயடைத்துப் போனார்கள். அதுமட்டுமல்ல அந்த 'வியாபாரத்தில்' எனக்கு விருப்பமில்லை. விருப்பம் இருந்திருந்தால் அந்த வியாபாரத்தை 1972 லேயே தொடங்கியிருப்பேன் என்றும் கூறினேன்.

ஆகவே நண்பர்களே,

கடைவிரித்தேன், கொள்வாரில்லை என்பது தவறு! உதவுவார் இல்லை என்பதுதான் உண்மை! இதுவரை என் இலட்சிய பயணத்தில் தோள் கொடுத்தோருக்கெல்லாம் என் நன்றி! ஆனால் இந்த என் முயற்சியோ என் வாழ்நாள் வரை தொடரும்!

---

கோபம் பலவீனத்தின் அறிகுறி என்று காந்தியார் கூறினார் அவர்தான் போய்விட்டாரே இனி அவர் 'உபதேசம்' பற்றியா கவலைப் படப்போகிறார்கள்—அவர் பெயர் கூறி பெரியவர்களாகி விட்டவர்கள்.

அவருக்கு சிலைகள் அமைத்திருக்கிறோம், அவர் பெயரில் நகர்கள், நெடுஞ்சாலைகள், பூங்காங்கள், பவனங்கள், கல்விக்கூடங்கள் பிரார்த்தனை மண்டபங்கள் அமைத்திருக்கிறோம். போதாத எமக்குள்ள பக்தியைக் காட்ட என்று கேட்பார்கள் அவர் 'பேச்சைத் துச்சமென்று தள்ளிவிட்ட தூயவர்கள்''

24—4—66
காஞ்சி—கடிதம்

---

தம்பி, எதை எதையோ நம்பிக்கிடக்கும் மக்கள் இன்னமும் ஏராளமாக இருக்கிறார்களே!

அனுப்பிய மணியார்டர் வந்து சேர்ந்ததாகக் கடிதம் வருவதற்குள் துடிதுடிக்கும் அதே மக்கள், மேலுலகு சென்றுவிட்ட பெரியவர்களுக்கு 'திவசம்' செய்வதன் மூலம், பண்டம் அனுப்பி வைப்பதாக நம்பிக் கொண்டிருக்கிறார்களே!

காஞ்சி கதடிம் 6-5-65

தமிழ்நாடு ஆவணக் காப்பக நிலையம் 217219. சென்னை-600 008

# திருமணம்

திரு. சு. நடராசன், ஒய்வு பெற்ற மேலாளர், தென்னக இரயில்வே, முன்னாள் தலைவர் தமிழ்ச்சங்கம், குண்டக்கல் அவர்களது இளையமகன் மருத்துவர், என். இளங்கோ, எம். பி. பி. எஸ், திரு. ஆர். குணசீலன் அவர்களது செல்வி மருத்துவர் ஆர். ஜி. உமாஜெய சீலி, எம் பி. பி எஸ். டி. சி, எச் ஆகியோரது திருமணம் சென்னை போரூர் வெங்கடேஸ்வரா மகாலில் 18—4—94 அன்று காலை பெரியோர்களும் உறவினர்களும் நண்பர்களுய் வாழ்த்த சிறப்போடு நடைபெற்றது.

---

# திருமண வரவேற்பு

காஞ்சிபுரம். திரு. கோ. இராதாகிருட்டிணன் எம். ஏ., புரவலர் பேரறிஞர். அண்ணா இலக்கியப் பேரவை, கூடுதல் இயக்குநர் மருத்துவம்—ஊரகநலப் பணிகள்—குடும்பநலம். திருமதி—யமுனா இராதாகிருட்டினன் அவர்களது மகள் அன்பு செல்வி எம். ஏ, திரு. பாலசுப்பிரமணியம் அவர்களது செல்வன் திரு. பா. அரிகிருட்டினன் பி. இ. எம் பி. ஏ. ஆகியோரது திருமணம் 24—4—1993 காலை நடைபெற்றது. மாலை 6 30 மணியளவில் சென்னை நாதெள்ள சுலேச்சனா திருமணமண்டபத்தில் வரவேற்பு விழா நடைபெற்றது. மணமக்களை நேரில் வந்து வாழ்த்தியவர்கள். நிதி அமைச்சர் டாக்டர் நாவலர், திரு. தமிழ்க்குடிமகன், டாக்டர், அண்டே. திராவிடர் கழகப்பொதுச் செயலளார், கீ. வீரமணி. திரு. முரசொலிசெல்வம், டாக்டர், ரஷ்யா, டாக்டர் சி என். ஏ. பரிமளம் சா. கணேசன் சேடப்பட்டி முத்தையா சட்டமன்ற பேரவை தலைவர் அமைச்சர் மாண்புமிகு. க. பட்டாபிராமன. தி மு க. தலைவர் கலைஞர் மு. கருணாநிதி வாழ்த்து செய்தி அனுப்பி இருந்தார் மற்றும் தமிழக அரசு. ஐ. ஏ. எஸ், ஐ. பி. எஸ். அதிகாரிகள மருத்துவர்கள், நீதிபதிகள், ஆகியோர்.

---


## 'காஞ்சி நாடு' விளம்பர கட்டணம்

| | |
|---|---|
| அரை பக்கம் உள்ளே | ரூ. 250/- |
| முழுப்பக்கம் உள்ளே | ரூ. 500/- |
| அட்டை 2, 3-ம் பக்கம் | ரூ. 750/- |
| அட்டை 4ம் பக்கம் | ரூ. 1000/- |




JL M213, N92KN N94.3.5

இனியன கேட்பின்
என்னரும் தம்பி
இனிது இனிது இலட்சியம் இனிது
அதனினும் இனிது அதன் பகைவர்கள்
அடுத்ததன் நணபராய்
ஆகுதல் அன்றோ!

பேரறிஞர் அண்ணா

---

தம்பி, டாக்டர் சுகர்சேனாவின் கண்ணீர் இரக்கஉணர்ச்சியைத் தூண்டிவிடவில்லை எனினும், ஆட்சிப்பொறுப்பினை ஏற்றுக்கொண்டா ரனைவருக்கும் பாடம் புகட்டத்தக்கது! ஆர்பரித்து கிடப்பவன் ஒரு நாள் அழுது தீரவேண்டும். மக்களை கசக்கிப்பிழிபவன் ஒரு நாள் கண்ணீர்சிந்திடவேண்டிவந்திடும்.

காஞ்சி கடிதம்
26—6—66

---

# அண்ணாவின் பெருந்தன்மை!

அண்ணாவுடன் நான் வாழ்ந்த காலத்தில் கண்டது யாரையும் தன்னைவிட எதிலும் வளர கூடாது என்று எண்ணுபவர் அல்ல! அந்த அந்தத் துறையில் தன்னைவிட உயரவேண்டும்—கட்சியை வளர்க்க வேண்டும் என்று கருதியவர்

அதனால் சிலருக்கு தன்னிடம் உள்ள முக்கிய புத்தகங்களை கொடுத்து படிக்க சொல்லி —மூன்று—நான்கு மாதங்களுக்கு பிறகு— உன்னை சந்திக்கும் நேர்த்தில்—புத்தகத்தில் படித்ததை உணர உன்னை கேள்வி கேட்பேன் அப்போது பதில் சொல்—என்று அனுப்பி வைப்பார்.

- ஓவியரா — அவருக்கு (ஸ்கெச்) போட்டு இப்படி வரை-என்பது
- நடிப்பா—அதற்கு தகுந்தாற்போல் நடித்து காட்டுவது
- எழுத்தாளரா— சப்ஜெக்ட் கொடுத்து — இப்படி இருக்க வேண்டுமென்பது.
- பேச்சாளரா—அவர்களுக்கு தகுந்தாற்போல்—நகைச்சுவையுடன் உறையாடுவது!

இப்படி பல! பல!

தொகுப்பு : C. R, கண்ணன்

# அறிஞர் அண்ணாவின் தன் வரலாறு (21)

— Dr. சி. என். ஏ. பரிமளம் —

நினைவிருக்கிறதா தம்பி. எனக்கு செந்தேனாக இனிக்கிறது நினைவு—திருச்சி தான். திராவிட முன்னேற்ற கழகமாக நாம் பணியாற்றத்தொடங்கியதும், நாம் நடாத்திய முதல் மாநாடு—மாவட்ட மாநாடு! ......மாவட்ட மாநாட்டுக்கான கொட்டகை அமைக்கப்பட்டு விட்டது—மறுநாள் மாநாடு-முன்னான் மாலை சென்று பார்க்கிறேன்-பசியுடன் உள்ள பெரும்புலி தன் அகன்ற வாயைத்திறந்து கொண்டிருப்பது போல், கொட்டகை காட்சி அளிக்கிறது; இதோ என் மனக் கண்ணால்காண முடிகிறது அந்த கொட்டகையை

'சாம்பு'

'என்னண்ண'

'பந்தல்......... கொட்டகை

'அவசரத்தில் போட்டது. இவ்வளவு தான் முடிந்தது இவ்வளவு தான் முடிந்ததா...... என்ன சாம்பு விளையாடுகிறாய் இவ்வளவு பெரிய கொட்டகையை ஏன் போட்டாய், யார் போடச்சொன்னது? இவ்வளவு பெரிய கொட்டகைக் ஆட்கள் எங்கிருந்து கொண்டு வந்து குவிப்பது? நாளைக்கு இதிவே கால் பகுதிக்கு—கூட தோழர்கள் வருவார்களோ இல்லையோ! இவ்வளவும் நாளைக்கு காலியாக இருக்குமே! எப்படி அந்த அவமானத்தை தாங்குவது! என்னவம்பு செய்துவிட்டாய் சாம்பு!

'அண்ணா, கொட்டகை பெரிது என்கிறாயா?'

இதிவே சந்தேகம் வேறா உனக்கு, போ, சாம்பு போய் பந்தல் காரர்களை அழைத்து வா. பந்தலில் பாதி அளவுக்கு மேல் தனித்தனி விடுதிகளாக மாற்றி அமைத்தாக வேண்டும். காலி இடமாக கொட்டகைத் தெரியக்கூடாது. இதிவே ஒரு இடத்தில் தொண்டர் முகாம், மற்றோர் பக்கம் பிரதிநிதிகள் ஜாகை, இன்னோர்பக்கம் ஏதாவது ஒரு விடுதி, எதையாவது செய்து, கொட்டகையின் அளவை குறைத்திட வேண்டும்;

'வேண்டாமண்ணா'

'சாம்பு, என்னிடம் விளையாடாதே! இது தான் முதல் மாநாடு, நாம் கழகம் துவக்கி, காலை ஊன்றிவைக்க ஆரம்பித்திருக்கிறோம் இந்த

நேரத்திலே மாகாண மாநாட்டுப் பந்தல் போல் கொட்டகை போட்டு விட்டு, ஆள் கிடைக்காமல் நாளைக்கு அசிங்கப்படுவதா? விண்விஷப் பரீட்சை வேண்டாம் மாலையில் நான் பார்க்க வருவேன் அதற்குள் கொட்டகையின் அளவு சிறிதாக்கப்படவேண்டும்,

'சரி அண்ணா'

தாமு, இந்த வேலையை உடனே கவனி; பராங்குசம் என்னவோ, ஏதோ என்று இருந்துவிடாதே; மணி கவனமிருக்கட்டும்! சாம்பு! உடனே வேலை நடந்தாக வேண்டும்.

கொட்டகை பெரிது, கூடிட ஆட்கள் வரமாட்டார்கள் என்ற சந்தேகம் குடைந்தது—சாம்புவிடம் சண்டைக்கு நின்றேன்.

அதே திருச்சியில், அதே சாம்புவே, இரண்டாயித்துக்கு, ஆயிரம் என்ற அளவில் கொட்டகை அமைத்துக் கொண்டிருக்கிறார். தம்பி! இந்த இன்பம் எத்தகையது என்பதை எண்ணும் போது, ஆஹா! எப்படியிருக்கிறது என்கிறாய்!!

சாம்பு,சாம்பு! என்று அழைத்துக்கொண்டு அன்புக்கட்டளைகளைப் பிறப்பித்துக்கொண்டிருந்த 'சங்கரன்' இல்லை, இந்த இன்பத்தை உடனிருந்து சுவைக்க—இயற்கையெய்தி விட்டார்—ஓடி ஆடி வேலை செய்து, சிறப்பினை கூட்டித் தந்திட நண்பர் 'இருதயராஜ்' இல்லை— அணைந்துவிட்டது அந்த திருவிளக்கு—இந்த வாட்டம் என்னை வருத்தத்தான் செய்கிறது......... 15—4—1956

நாம் வளர்ந்துவிட்டோம், இனி மறைத்துப் பயனில்லை என்ற கட்டம் பிறந்ததும், முழு மூச்சுடன் நம்மை எதிர்ப்பர்—கடுமையாக எதிர்ப்பர்—என்பதும் எதிர்பார்த்தது தான். இவைகட்கெல்லாம், நான் அஞ்சியதில்லை, 'நாம்' ஓர் இலட்சியத்துக்குக் கட்டுப்பட்டவர்கள் ஆதலால்.

எனக்கு மட்டும் ஒரு அச்சகம் இருந்தது—அது திராவிட கழகத்தைப்பற்றி.

ஆயிரம் கருத்து வேற்றுமைகள் இருப்பினும், புகைத்துக்கொள்வ தற்கான காரணம் பல கிளம்பிவிடினும், திராவிடர் கழகம் என்பது, நமது 'பாசத்தைப்' பெற்ற இடமல்லவா!! சேலத்தில் ஜஸ்டிஸ் கட்சியே இனி திராவிடர் கழகம் என்று பெயர் மாற்றப்பட வேண்டியது தான் என்று 'அண்ணாத்துரை தீர்மானம்' என்ற பெயரிட்டு பெரியார் திட்டம் தந்தாரல்லவா, அதற்கும் முன்பே, காஞ்சிபுரத்தில் திராவிடர் கழகம் என்பதாக அமைப்பு அரும்பிற்று. சேலத்துக்குப் பிறகு, சீமான்களின்

சீற்றத்தைத் தாங்கிக் கொள்ளவும். பதவிப்பிரியர்களின் பகையை எதிர்த்து நிற்கவும், எவ்வளவு கஷ்டப்பட வேண்டி இருந்தது. சேலத்தில் சிந்தை குழம்பிப்போன சீமான்கள், சென்னையில் முகாமடித்துக் கொண்டு, எவ்வளவு 'சிண்டு' முடிந்து பார்த்தார்கள். தம்பி! அந்தக் காதை மிக மிகப்பெரியது. அப்போதெல்லாம் அன்புப்பாலூட்டி வளர்த்தோமே. அதற்கான அமைப்பு முறைபற்றி ஆயிரம் கனவு கண்டிருப்போம். அதற்கென ஓர் கொடி தேடிடப் பல முயற்சி—இவ்வளவு தொடர்பு பாசத்தை மூட்டாமலிருக்க முடியுமா! ஆகையால், நாம் பெரியாரின் திருமணத்தால் திடுக்கிட்டுப்போன நிலையில் வெளியேறி, முன்னேற்றக் கழகமாகப் பணியாற்றத் தொடங்கியபோது, எனக்குப் பயமாகத்தான் இருந்தது என்ன பயம் தெரியுமா தம்பி, எதிர்ப்பார்கள் என்ற பயமல்ல —பிரிந்து போனவர்கள் பைத்தியக்காரர்கள், நல்ல பிள்ளைகள் தான், ஆனால் என்னவோ ஒரு தவறான காரணத்துக்காகக் கோபித்துக்கொண்டார்கள். அவர்களிடம் எனக்குக்கோபம் கிடையாது சிறியோர் செய்த சிறுபிழை எல்லாம் பெரியோராயின் பொறுப்பது தானே கடன், அதுபோல, சிந்திக்கத்தெரியாத இந்தச் சிறுபிள்ளைகள் என்னவோ தனிக்குடித்தனம் வைத்துக்கொண்டார்கள், போகட்டும் பாபம், எங்கே இருந்தாலும் புத்தியோடு பிழைத்தால் போதும், எங்கே இருந்தாலும் என் சீடப் பிள்ளைகள்தானே, அவர்களுக்கு என்ன பெருமை வந்தாலும் அது அவ்வளவும் எனக்குத்தானே பெருமை நன்றாகப்பேசுவார்க , என்னிடமல்லவா பயிற்சிபெற்றவர்கள், நன்றாக எழுதுவார்கள், ஈரோட்டுப் பள்ளியிலல்லவா படித்தார்கள், கொள்கையில் பற்று இருக்கும், என்னிடம் பெற்ற பாடம் வீண் போகுமா, நல்ல பிள்ளைகள் நமது சீட பிள்ளைகள்—என்று பெரியார் அன்புடன் பேசினால்—பிரிந்து வந்துவிட்ட பிறகும் நம்மீது பிரியம் காட்டினால், இன்மொழி பேசினால், என்ன செய்வது!! பெரியார் அந்தப் போக்கிலே நடந்துகொண்டால், நாம் யார்தான் அப்போது என்ன செய்திருக்க முடியும்?

என்ன இருந்தாலும் அவருக்கு நம்மிடம் அன்பு குறையவில்லை.

என்ன காரணத்தாலோ ஒரு திருமணம் செய்து கொண்டாரே தவிர, நம்மை இன்னமும் பிள்ளைகளாகவேதான் பாவிக்கிறார்.

நாம் பிரிந்து வந்துவிட்டோம் என்ற போதிலும் நாம் நன்றாக இருக்கவேண்டும் என்பதிலே அவருக்கு எவ்வளவு அக்கறை பார்த்தீர்களா! பெரியார் பெரியார்தான்!!

என்னவோ 'விஷக்கடி வேளை' என்பார்களே, இதுபோல் திருமண மூலம் ஒரு பேதம் பிரிவு—பிள . ஏற்பட்டது அவரோ நம்மைப்

பகைவர் என்று கொள்ளவில்லை. பரிவுகாட்டுகிருர்-பாசம் வைத்திருக் கிருர்.

பிரிந்து, தனியாகிவிட்ட போதிலும், எதிர்த்த நம்மைக் காட்டிக் கொடுக்கவில்லை. கொள்கையை நாம் நமது முகாமிலிருந்து பரப்பு கிறேம் என்ற வகையில் மகிழ்கிருர்—ஆதரிக்கிருர். கோபம் கொண்டு நாம் தான் அவரை விட்டுப் பிரிந்து வந்து விட்டோமே தவிர, அவரு டைய பொன்னன குணத்தைப் பார். துளியாவது நம்மிடம் துவேஷம், பகை, இருக்கிறதா? இப்போதும் நல்ல பிள்ளைகள், நம்ம பிள்ளைகள் என்று பாசத்தோடு பேசுகிருர். இப்படிப்பட்ட பெரியாரிடமிருந்து நான் பிரிந்துவிட்டோமே! என்ன பேதைமை! என்ன பேதைமை!!

தம்பி! இவ்விதமெல்லாம்தானே நாம் எண்ணி இருந்திருப்போம்—கோபம் தணிந்துவிட்டிருக்கும்—வெட்கம்கூட நம்மில்பலருக்கு ஏற்பட் டிருக்கக்கூடும்—மெள்ள மெள்ள, நம்மிலே சிலரே. போகட்டும், நண்பரே! ஏதோ நடந்தது நடந்துவிட்டது—இனியும் நாம் பிரிந்திருக்க வேண்டாம். அவர் இவ்வளவு அன்பும் பாசமும் காட்டும்போது, நாம் பேதமும் விரோதமும் காட்டுவது சரியல்ல திருமணம்பற்றித் திடுக் கிட்டுப்போனேம்—கோபத்தால் வெளியே வந்தோம்—வெளியே வந்ததால், வேறு கட்சியாகப்பணியாற்றினேம், அவர் இவ்வளவுக்குப் பிறகும் நம்மிடம் பிரிவு காட்டும்போது, நாம் பழையபடி ஒன்ருகிவிட வேண்டியதுதான்—என்று கூறிடத்தானே செய்திருப்போம்—பிறகு முன்னேற்றக் கழகம் ஏது! ஒன்ருகிவிட்டிருக்க வேண்டியது தான்! இடையிலே, ஓடியதும் ஆடியதும், பரணி பாடியதும்; படை கூடியதும் வீண்! வீண்!!

இவ்விதமான ஓர் நிலைமை ஏற்பட்டுவிடுமோ, என்ற அச்சம் மட்டும் எனக்குத் துவக்கத்தில் இருந்தது.

எதையும் தாங்கிக்கொள்ள முடியும், ஆண்டு பலவாக நம்மை நடத்திச் சென்றவர், நாம் அறிந்த ஒரே தலைவர், அவருடைய வாயி லிருந்து உதிரும் வார்த்தைகளை எல்லாம் தத்துவம் என்று கொண் டாடும் அளவுக்கு நாம் 'பக்தி' செலுத்தி வந்தோமோ, அப்படிப்பட்ட பெரியார், அன்புக்கண்களை ஏவியிருந்தால், அதனை மட்டும் நம்மால் எதிர்த்திருக்கவே முடியாது.

பாசத்துடன் கலந்த ஒரு பார்வை, பரிவான பேச்சு, பழைய நேசம் பாழ்படாது என்பதைக் காட்டும் சிறு நடவடிக்கை எழும்பியிருந்தால் போதும், முன்னேற்றக் கழகம் இல்லை!

பெரியாரின் போர்முறை இவ்விதம் அமைந்து விடுமானால் தனிக் கழகம் தானாகவே வீழ்ந்துபடும்—இதற்கு, ஆயிரம் பாடுகள் படுவானேன்—என்று நான் எண்ணினதுண்டு.

ஆனால், அந்த என் அச்சம், பொருளற்றதாக்கப்பட்டுவிட்டது

அன்பினால் நம்மை வீழ்த்தியிருக்கமுடியும் - ஆரம்பக்கட்டத்தில்—பாசத்தால் நம்மை இழுத்துக்கொண்டிருக்க முடியும் நேசம் காட்டி இருந்தால், நம்மில் பலருக்கு நெறித்தபுருவம் இருந்திராது. ஆனால், அந்த முறைக்கு இடமில்லாத 'சர்வ ஜாக்ரதை'யுடன் மிகத் திறமையாகக் கவனித்துக்கொண்டார், தூண்டிவிட்டு துண்டு தேடிக்கொண்டு ஓடிவிட்ட உத்தமர். 15—4—1956

இரவு இப்போது பகலை அழைத்து பணியாற்றச் சொல்லி விட்டு, ஓய்வு கொள்ளச்செல்லுகிறது—விடிகிறது—தம்பி! இடியும், மின்னலும் மழையும் காற்றும், என்னையும் மாநாட்டு அலுவலைக் கவனித்துக் கொண்டு இங்குள்ள நம் தோழர்களையும் மிரட்டிக்கொண்டிருந்த நள்ளிரவில் உன்னைப்பற்றி நினைவு வந்தது, மாநாட்டுக்கான இந்த அழைப்பை எழுதத்தொடங்கினேன்! இதோ இரயிலுக்கு கிளப்புவோர் ஏறிச்செல்லும் வண்டிகளின் ஒளிகேட்கிறது உனக்காக-தம்பி—உற்சாகத்துடன் இங்கு மாநாட்டுக்கான எழிலை அளித்திட யாரார் பணியாற்றிக் கொண்டுள்ளனர் தெரியுமா?

இதேபோது, திருச்சியில் வேறோரிடத்தில் மதியழகனும் வில்லாளனும், மாநாட்டுக் கொட்டகையிலும் திருச்சி நெடுஞ்சாலையிலும் அமைக்கவேண்டிய வளைவுகளுக்கான, எழுச்சி உரைகளை, ஆய்ந்தறிந்து தயாரித்துக் கொண்டிருக்கிறார்கள்

நாலு நாட்களாகவே, நாவலரும், திராவிடன் ஆசிரியரும், நமது கழகச்சட்டதிட்டத்தில் திருத்தங்கள் செய்யும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

அம்பிலும், பராங்குசமும், மணியும், ராபியும்—அவர்களுடன் கூடி பணியாற்றி என்னைக் குதூகலித்திடச் செய்யும் தோழர்களும், பம்பரமாய்ச் சுற்றுகிறார்கள்; பணியிலே தரமும் வகையும் வளருகிறது; இடையிடையே என் கோபத்தையும் தாங்கிக்கொள்கிறார்கள்; என்னை நன்றாக அவர்கள் அறிந்திருப்பதால், என் கோபத்தின் உட்பொருளை அவர்களால் உணர முடிகிறது; உணர முடிவதால், நமக்குத் தெரியாததா? இவன் யார், இது சொத்தை அது சோடை என்று கூற? விளக்கமிலாத வீணன்—என்று கூறி என்னை ஒதுக்கிடும் நிலையில் இல்லை. ஓடுகிறார்கள்—பாடுபடுகிறார்கள்—கொட்டும் மழை கண்டும், வீசும் பெருங்காற்றுக் கண்டும் நான் கிலிகொள்ளும்போது, அவர்கள் எனக்குத் 'தைரியம்' ஊட்டுகிறார்கள்.

திருச்சி நகராட்சி மன்ற உறுப்பினரும், நமது கழகத்தோழருமான தோழர் நாகசுந்தரம் நற்பணியாற்றிக்கொண்டு வருகிருர். அவருடைய சீரிய முயற்சியால் மாநாடு சிறப்புப்பெறுகிறது. நகராட்சி மன்றம் நாவலருக்கு வரவேற்பளிக்கத் தீர்மானித்திருப்பது நாகசுந்தரத்தின் வெற்றிகளில் ஒன்று

பழனி, அரசு, ராஜு, கருணு மணி—ஓவியர்கள் பகலை இரவாக்கிக் கொண்டுள்ளனர். இளமுருகு—இத்துறைக்குப்பணியாற்ற. பல்வேறு முயற்சிகளில் ஈடுபட்ட வண்ணமிருக்கிருர்,

லாரிகள் வந்துவிட்டன—என்ருேர் மகிழ்ச்சிக் குரல் கேட்கிறது. என்னவென்று சென்று பார்க்கிறேன். நமது புரட்சி நடிகரின் மேற்பார்வையில் தயாரான முகப்பு வந்து இறங்குகிறது ஏ, அப்பா! என்னென்ன வளைவுகள்! என்னென்ன மாடங்கள்! எல்லாவற்றையும் பொருத்திக் கோத்து வண்ணமளித்தாலல்லவா தெரியும், எழில்!—என்று கூறுகிருர். சென்னை மாவட்ட மாஜி—கண்ணபிரான்

கொடிகளும் தோரணங்களும் தயாரிக்க, ஈரோட்டிலிருந்து அழகிய இரு வண்ணத் துணி மூட்டைகளை முன்னலே அனுப்பிவிட்டு, தையற்கலையுடன் கழகப் பற்றை உடன் கொண்டுவரும் தேவராசன் என்பாரை உடன் அனுப்பி வைத்துவிட்டு, கரூர் தோழர் சோமுவையும், கூடுவதும் குறைவதுமாக உள்ள வயற்று வலியையும் உடன் அழைத்துக்கொண்டு வந்துள்ள சம்பத்து, மாநாட்டுத் தீர்மானம் குறித்து கவனித்து வருகிருன்.

ஒளியும் ஒலியும்—வண்ணமும் வகையும் உள்ளதாக இருப்பதற்கான பொறுப்பை ஏற்றுக்கொண்டுள்ள ராபி, வண்டுபோல் சுற்றி, மலர்போல் முகம் காட்டி, தேன்போலப் பேசி விருந்தளிக்கிருர்,

விதானம் தேவையா? குளோப் லஸ்தர் தேவையா? என்ன வேண்டும்: கொண்டுவந்து குவிக்கிறேன்—என்று கூறிக் குதூகலிக்கச் செய்கிருர் கண்ணதாசன்.

எல்லோரும் ஏதேதோ செய்து கொண்டிருந்தால், 'உண்டி'ப் பிரச்பினையை யார் ஏற்று நடத்துவது என்று கவனிக்காமலிருப்பதா—இதோ இராஜமாணிக்கம் எனும் ஆசிரியத் தோழரொருவரும், போளூர் சுப்பிரமணியமும் நீண்டநாள் உணவுவிடுதி நடத்தி அனுபவம் பெற்றவர்கள் போலப் பணிபுரிகிருர்கள்—சுவையான பகுதி அவர்கள் பணியில் காணக் கிடப்பது. மறுவேளை சாப்பிட்டே ஆகவேண்டும் என்ற ஆசையை உண்போர் கொள்ள முடியாதபடி செய்திடும் ''பாக முறை'' என்று, உணவு விஷயத்தில் உருசிகரமான பிரியம் உள்ளவர்

கள் இங்கு பேசிக்கொள்கிறார்கள்! இந்தச் செலவே அதிகம்தான் என்று எச்சரித்தபடி இருக்கிறார் நமது பொதுச் செயலாளர்.

எல்லாம் பந்தலைப் பொருத்துத் தானே—என்று கண்ணால் கேட்டபடி, காற்றாடியாகக் காட்சிதரும் வானமாமலையும், பார்ப்பவர்களை மலைக்கவேண்டும், செலவுக் கணக்குப் பார்க்கும்போது நாம் ஐயோ இவ்வளவா என்று திகைத்திடும் நிலை கூடாது—இந்த முறையில், திட்டம் இருக்க வேண்டும் என்று பணியாற்றிக்கொண்டு வருகிற சாம்புவும், நமது மாநில மாநாட்டுக்கு ஆற்றிவரும் பணியின் வடிவம் மே 17, 18, 19, 20ல் நீ காணத்தானே போகிறாய். தம்பி! எத்தனை எழில் முகப்புகள் தெரியுமா?

ஏறத்தாழ நாலாயிரம் செலவில், இரவு பகலென்று பாராமல், நமது இயக்கப் பற்றுக்கொண்ட கலை வல்லோர் உழைத்து அமைத்து சென்னையிலிருந்து கொண்டுவந்திருக்கும், முதல் முகப்பு அரண்மனை வாயில்போல் காட்சி தரும்.

அதில் நுழைந்து (கட்டணம் செலுத்தித்தான்!) உள்ளே வந்தால், தஞ்சை மாவட்டத்துக்கே தனிச் சிறப்பாக அமைந்துள்ள கீற்று அலங்கார முகப்பு, குத்தாலம் வேலைபாடுடன், உன்னை வரவேற்கும்.

இடையில், பட்டொளி வீசிப் பறந்திடும் கொடி, 50 அடி உயரமுள்ள 'கம்பம்' தனில் காணக் கிடைக்கும்.

இப்புறம் சென்றால், அலங்கார வளைவு, அதிலே வள்ளுவப்பெருந்தகையின் வடிவம், காட்சி தரும்—எதிர்ப்புறமோ சிறியதோர் மணிமாடம் எனத்தக்க அமைப்பிலே, புத்தர்!

வள்ளுவரைக் கண்டு மகிழ்ந்து, அவ்வழி சென்றால் ஓவியக்காட்சி, உள்ளத்தை மகிழச் செய்யும்—அறிவுக்கு விருந்தாகவும் இருக்கும்.

கொடிமரத்தையும் குத்தால வேலைப்பாட்டினையும் கண்டான பிறகு, மேலால் சென்றால், தம்பி, மூன்றாவது முகப்பு காண்பாய்! ஆங்கு, விலங்கொடித்த விடுதலை வீரன், எழுச்சியூட்டி உன்னை வரவேற்கும் காட்சி உண்டு! மேலாக நடந்தால், போகப்போக வளர்ந்துகொண்டே போகும்—நாலிகு அலங்காரத் தூண்களும் ஆற்றலை விளக்கும் அரிய புதுமைகளும், பிறை வடிவான மேடைக்கு அழகளிக்க மேலே இருந்து சின்னாளப்பட்டி வண்ண ஆடை திரையாகி கண்ணைக் கவரும்—அங்கு தான், கழகத் தோழர்கள் புடை சூழ, நமது நாவலர் வீற்றிருப்பார்—அழகு தமிழில், ஆற்றல் உண்டு என்பதை எடுத்துக்காட்ட!

ஒரு கிழமையாக அவருடன் இடைவிடாது உரையாடும் வாய்ப்பும்

பெற்றதால், என் நண்பர் இராஜகோபால் அல்லவா, கேட்கிறார், எனக்கென்று ஒருவேலை தாருங்கள்! இவ்வளவுபேர் வேலை செய்யும்போது நான் மட்டும் வாளா இருப்பதா? என்று கேட்கிறார்! திராவிடத்திலே, புதியதோர் எழுச்சி என்று கூறினால் ஏது என்று கேட்கிறார்களே சிலர்—அவர்கள் இந்தக் காட்சிகளைக் கண்டாலல்லவா புரியும்! அவர்களின் கண்களும் அகலத் திறந்திடும் முறையில், தம்பி, இலட்சக்கணக்கிலே திரண்டிட வேண்டுமல்லவா, திராவிடர்கள்.

அனைவருக்கும் கூறி அழைத்துக்கொண்டு வரத்தான் போகிறாய்; உனக்கில்லையா அந்த ஆர்வமும், பொறுப்பும்! போ தம்பி, எதை எழுத, எதை எழுதாமலிருக்க—கரமும் வலிக்கிறது, காகமும் கரைகிறது.

உள்ளத்தில் உறுதி கொண்டால், வாக்கினிலே வலிவும் பொலிவும் ஏற்பட்டே தீரும்—என்பதனை எடுத்துக்காட்டு விதமாக, மாநில மாநாட்டிலே பல்வேறு பிரச்சினைகளைப்பற்றி நமது தோழர்கள் பேசினர் அல்லவா! அதுகேட்டு மகிழாதவர் யார்? மாநிலமாநாட்டுக்கு வந்திருந்த மாற்றுக் கட்சிக்காரர் கூட, மகிழ்ந்தனர்—அது வெளியே தெரிந்து விடக்கூடாதே என்பதற்காக, வெகுபாடுபட்டனர். அனைவருக்கும் ஆனந்தம் ஆனால் நான் அடைந்த மகிழ்ச்சி இருக்கிறதே, தம்பி, அது அலாதியானது. நீ அறிவாய், இந்த நாடும் அறியும், நான் பதினைந்து ஆண்டு காலத்துக்கு மேலாக, பெரியாரிடம் பணியாற்றியவன், என்பதை. அப்போதெல்லாம், அவர் கூறுவார்—யார் இருக்கிறார்கள், யோக்யதையுடன்? எவரை நம்பி எந்தக்காரியத்தை ஒப்படைப்பேன்? எவன் என் மனம் திருப்தி அடையும்படி நடந்துகொள்கிறான்—என்றெல்லாம் கேட்பதற்கு மெத்த வருத்தமாக இருக்கும்—சில விநாடிகளுக்குப்பிறகு வெட்கமாக இருக்கும்—நாட்கள் செல்லச் செல்ல வேதனையே கொடுக்கும். இவ்வளவு கஷ்டப்படுகிறார்—நாள் தவறாமல் பயணம்—நேரம் கிடைக்கும் போதெல்லாம் எழுதுகிறார்—ஓய்வின்றி உழைக்கிறார்—இருந்தும், ஒருவர் கூட 'யோக்யதை' யைப் பெறவில்லையே—பரிதாபம்—உழைப்பெல்லாம் வீணாகிப் போகிறதே என்று வேதனையாக இருக்கும் பிறகு என்னைப் பற்றிய எண்ணம் பிறக்கும்—சே! நமக்கு அந்தப் பரிபக்குவம் ஏற்படவே இல்லையே, என்று வெட்கம் பிறக்கும்.

அப்படிப்பட்ட 'நிலை' பெரியாருக்கு! இப்போது அதிலே மாறுதல் ஏதும் ஏற்பட்டு விடவில்லை என்பது ஒரோவழி அவர் அறிக்கைகள் அறிவிக்கின்றன.

நான் மாநில மாநாட்டிலே 'கர்வம்' கூட அடைந்தேன்! எத்தனை எத்தனை ஆற்றலுள்ள இளைஞர்கள், பொறுப்பறிந்த பெரியவர்கள்,

**அஞ்சா நெஞ்சு படைத்த வீரர்கள்! ஆறேழு ஆண்டுகளிலே அமைந்து விட்ட அணிவகுப்பு!**

மகிழ்ச்சியுடனும் நம்பிக்கையுடனும்—அமைக்கவேண்டிய கொட்டகையின் அளவு குறிப்பதிலும், கொட்டகைக்கு ஏற்ற கழிகள் பொறுக்குவதிலும், கழிகளுக்கேற்ற குழிகள் பறிப்பதிலும் அதற்கான உழைப்பை உற்சாகத்துடன் தந்திடும் தோழர்களின் உள்ளன்பபைக் காண்பதிலுமல்லவா ஈடுபட்டிருந்தேன்—நாவலரும் நடராசனும் பிரதிநிதிகள் கூட்டம் நடத்துவதிலும் தீர்மானங்கள் குறித்து ஆய்வுரை நடத்துவதியும் ஈடுபட்டிருந்த நேரத்தில்.

எனக்கு, எந்தக்காரியம் குந்தகப்பட்டு விடுமோ—அது எப்படிக் குலைந்து விடுமோ—நமது கண் பார்வை விழாததால், கை படாததாலோ எந்தச் செயல் செம்மையற்றதாகியிடுமோ என்ற கவலையே எழவில்லை—எல்லாவற்றினையும் பொறுப்புடன் கவனித்துக் கொள்ள, நிரம்பத் திறன்படைத்த எங்கள் நமது கழகத்திலே இருக்கிறார்கள்—என்ற நம்பிக்கை காரணமாக

தம்பிக்கு—3-6-56

திக்கு தெரியாத காட்டில் துரத்திவிடப்பட்ட பாலகர்கள் போல், மேல் வேட்டியை உதறிப் போட்டுக்கொண்டு, உழைத்தது வீணாச்சே, இனிஉலகு என்னவழி காட்டப்போகிறதோ பார்ப்போம் என்ற ஏக்கத்துடன் முதலாளியின் மாளிகையை விட்டு வெளி ஏறும் உழைப்பாளியைப் போல அன்று நாம் வெளியேறினோம்.

வெளியேறினோம் என்பதைக்கூட உலகு ஒப்பக்கூடாது என்று வெளியேற்ற எல்லா ஏற்பாடும் செய்து வைத்திருந்தேன். திருட்டுப் பயல்க, எப்படியோ அதை தெரிந்துகொண்டு. தலை தப்பினால் தம்பிரான் புண்யம் என்று ஓடிவிட்டார்கள் என்று தூற்றினர். துக்கத்தைச் சுமந்து கொண்டு துணைக்கு வருவோர் யார் இருக்க முடியும் என்று ஏதும் தெரியாமல் வெளியேறினோம் அரசியல் என்கில் என்ன சாமான்யமா? அன்னக்காவடிகளெல்லாம் பொது வாழ்வில் நிலைக்திருக்க முடியுமா? இதுகளுக்கு வாழ்வு இருண்டுவிட்டது பயூஸ் போன பல்புகளா விடவேண்டியதுதான்—சீந்துவார் யார் இருக்கப்பே-கிறார்க—திகைத்துத் திண்டாடி தெருவில் சுற்றி, தேசாத்திரியாக ஏதாவது ஒரு கட்சியின் காலடியிலே விழுந்து பிச்சை பிழைப்பு நடத்த வேண்டியதுதான், என்று "வாழ்த்தி வழியனுப்பினர்கள்."

தம்பி! நாம் உருத்தெரியாமலாகி விடவுமில்லை உருமாறிப்போய் விடவுமில்லை, ஊர்மக்கள் நம்மை உதவாக்கரைகள் என்று ஒதுக்கி விடவுமில்லை, வளர்ந்து நிற்கிறோம்.

எப்படி இது அவக்களுக்கு ஏமாற்றத்தையும் எரிச்சலையும் தராமலிருக்கும்.

தம்பி! நாம் மேற்சொண்டுள்ள காரியம் எளிதுதான நமக்கு அந்தக் காரியத்தை முடித்துக்காட்டும் ஆற்றல் ஏராளமாக இருக்கிறது என்ற எண்ணம் நம்மில் யாருக்கும் எழுந்ததில்லை. எனவேதான்? நம்மால் எவ்வளவு சாதாரணமாக வெற்றி பெற முடிகிறபோதும், மனதுக்கு ஒரு அலாதியான மகிழ்ச்சி பிறக்கிறது.

சுடு சோறும, சுவையான குழம்பும். பாட்டாளிக்கு இனிக்கிறது. பாதம் அல்வா பதிர்பேணி பங்களாவில் கசப்பாகக்கூட ஆகிவிடுகிறது. நாம், அரசியலில், பொது வாழ்வுத் துறையில், தீண்டப்படாதாராக—ஒதுக்கப்பட்டோராக—விரட்டப்பட்டவர்களாக—ஆக்கப்பட்டவர்கள்! எனவே நமக்குக் கிடைக்கும் மிகச் சாமான்யமான வெற்றியும், மனதுக்கு மகிழ்ச்சியூட்டுகிறது. மேலும் பல வெற்றிக்கான வாய்ப்பினையும் வலிவையும தருகிறது, இவ்விதமின்றி நாம்; நமது ஆற்றலைக் குறித்து மிக அதிகமான கணக்கிட்டுக்கொண்டு, நாம் சாதிக்க வேண்டிய காரியம்பற்றி மிகக் குறைவான கணக்கிட்டிருந்தால், எத்துணை மனவேதனை ஏற்பட்டிருந்திருக்கும், தெரியுமா!

நமக்கு இருக்கும் திறமையும் குறைவு; அதைவிடக்குறைவு நமக்கு அமைந்துள்ள வாய்ப்புகளும் வசதிகளும்; நாம் எதை எதை மாற்ற வேண்டும் என்று பாடுபடுகிறோமோ, அவைகளைக் கட்டிக் காப்பவர்களும், அதனால் பலன் பெறுபவர்களும் அறிவிலிகளுமல்ல, அவர்களுக்குக்கிடைத்துள்ள வாய்ப்பும் வசதியும் நமக்கு உள்ளதைவிட மிக அதிகமானது. எனவே நமது பணியின் பலன், வேகமாக உருவெடுக்க முடியாது என்பதை உணருகிறேன். எனவே உள்ளத்திலே, அமைதியேகூட ஏற்படுகிறது—சிறு உருவில் பலன் தெரியும் போது மகிழ்ச்சி பிறக்கத்தான் செய்கிறது. நம்மால் இவ்வளளவாவது முடிகிறதே என்ற மகிழ்ச்சி!

இதே நிலையில் தான் பெரியார் இருக்கவேண்டும் என்று தான் கூறவில்லை—கூறும் அளவுக்கு நான் குணம் கெட்டுப்போனவனல்ல,

அவசரப்படவும் ஆத்திரப்படவும், அவருக்கு உரிமை இருக்கிறது. ஏனெனில் அவர் ஒரு அரை நூற்றாண்டுக் காலமாக உழைத்து வருகிறார். இவ்வளவு உழைப்புக்குபிறகும், கண்ணுக்குத்தெரியும் பலன் சிறிய அளவாக இருப்பது கண்டு, அவர் சலித்துக் கொள்கிறார்,

ஆனால், அவர்மட்டுந்தான், அந்த உரிமை பெற்றிருக்கிறாரே தவிர அவருடன் பணியாற்ற அவ்வப்போது அவருக்காக கிடைப்போர்கள்,

அதே அளவுக்கு உரிமை பெற்றவர்ளாகிவிட முடியாது.

சர்ச்சிலுக்கு ஈடன் கிடைத்தார்—பெரியார் எந்த ஈடனையும் பெற்றதில்லையே!

கிடைப்பவனெல்லாம், காட்டிய வழி நடக்க, போட்ட கோட்டை மீருதிருக்க, மரட்டிய கடிவாளத்துக்கு ஏற்றபடி விரும்ப, பயிற்சி பெற்று படையில் இருக்கிருர்கள்—ஏதோ கட்டம் வருகிறது—பிய்த்துக் ஒடுகிருர்கள், அல்லது பிய்த்தெறியப்படுகிருர்கள்.

ஜீவாவும் இராமநாதனும், விசுவநாதமும் பாலசுப்பிரமணியனும். சாமி சிதம்பரனுரும் வல்லத்தரசும், நீலாவதியும் ராமசுப்பிரமணியமும் பொன்னம்பலனுரும் பாண்டியனுரும், புகழுடன விளங்கி, இரத்தினங்களாய், மாணிக்கங்களாய், ஒளிவிட்டு வந்து, பிறகு விசி எறியப் பட்டுப் போனுர்கள்.

நான் இப்போது, காரணங்களை ஆராயவில்லை; பழயதையையும் கிளறவில்லை. பெரியாரின்பெரும்படைதளர்ந்து வருவதற்குப் பதிலாக எப்படி அடிக்கடி வதைபட்டு சிதைக்கப்பட்டு, மாற்றி அமைக்கப்பட்டு, வந்திருக்கிறது என்பதைக் காட்ட மட்டுமே இதைக் கூறுகிறேன்; குற்றம் சாட்ட அல்ல.

நண்பர் குருசாமிக்கே இது 'மூன்ருவது ஜென்மம்' என்று வருது கிறேன்,—இருமுறை அவரும் 'புளித்தவராகி' விட்டவர்தான்.

விலகியவர்கள்—விலக்கப்பட்டவர்கள்—அந்தந்த 'கால காட்டத் துக்கு' ஏற்றபடி, கசப்பும் காரமும் காட்டியும், கண்ணீர் வடித்துக் கை பிசைந்து நொடித்துப்போயும், வேறுகட்டம்தேடிக்கொண்டும், அல்லது வாழ்க்கைக் கலையில் ஈடுபட்டும் பல்வேறு வழியில் சென்றுவிட்டனர். நாம்மட்டுந்தான் தம்பி, கொள்கையை மாற்றிக்கொள்ளாமல், மாற்ருருடன் கூடிக் குலவிடாமல் முக்காடிட்டு மூலைக்குச் சென்றிடாமல் வீண் விம்புக்குப் பலியாகாமல், கலத்திலிருந்து விசி எறியப்படவர்கள். சுழலுக்கும் சுருவுக்கும் தப்பி, தெப்பத்தின் துணைகொண்டு, எங்கோ ஓர் திட்டுதேடி அலைந்து அங்கு தங்கி, சிறியதோர் சிங்காரத்தோணி அமைத்துக் கொண்டு, அதிலேறியம் பயணம் செய்வோர்போல தமது பயணத்தை, அதே பாதையிம், தொடர்ந்து நடத்துகிருேம்,

நம்மீது எரிச்சலும் பகையும் இந்த அளவுக்கு ஏற்டுவதற்கான காரணம் இதுதான்.

## திரட்டு

# வயலுக்கு நீர் பாய்ச்சினார்

கங்கை நதியில், பார்ப்பனர், நீரை எடுத்து கிழக்கு திசையை நோக்கி இறைத்துக்கொண்டு ஏதோ மந்திரத்தை முணுமுணுத்துக் கொண்டிருந்தனர்.

ஒருவர் கங்கையில் இறங்கினார் கையில் தண்ணீரை எடுத்து மேற்கு திக்கு நோக்கி இறைத்திடலானார். பார்ப்பனர் கிழக்கு நோக்கி கங்கா ஜலத்தை இறைக்க, அதே இடத்தில் இருந்து கொண்டு மேற்கு நோக்கி கங்கா ஜலத்தை இறைத்துக் கொண்டிருப்பது ஏதோ வேண்டுமென்றே கேலி செய்வது போலிருந்தது.

பார்ப்பனருக்கு கடுங்கோபம் பிறந்தது.

ஏலே பயலே! யார் நீ? என்ன காரியம் செய்கிறாய் என்று அதிகார குரலில் கேட்டனர்.

அஞ்சாநெஞ்சுடன் அந்த ஆசாமி கேட்டார். நீங்கள் என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்' என்று.

மூடா இது தெரியவில்லை பூஜை செய்கிறோம்—பிதுர்களுக்கு—அதற்காகத்தான் கங்கா ஜலத்தை கிழக்கு நோக்கி இறைக்கிறோம். என்று கூறினர். விளக்கம் உரைத்ததாக எண்ணிக்கொண்டனர்,

'அப்படியா நானும் காரியமாகத்தான் இதைச் செய்கின்றேன்' என்று கூறிவிட்டு மேற்கு திசைநோக்கி தண்ணீர் வாரி இறைத்தான்.

'மண்டு! பிதுர்களுக்கு கிழக்கு திசையில்தான் தண்ணீர் இறைப்பது அதுதான் சாஸ்த்திரம்' என்று புத்தி கூறினர் பார்ப்பனர்.

'கங்கா தீர்த்தம் பிதுர்களுக்கு கிழக்கே இறைத்தால் போய்ச் சேரும்—அப்படித்தானே! என்று கேட்டான் அப்பாவிப்போல்.

'ஆமாமடா அசடே! என்று பார்ப்பனர் பண்டித பாஷையில் பேசினர்.

'என் கிராமம், மேற்குப் பக்கம் இருக்கிறது—அங்குள்ள என் வயலுக்குத்தான் நான் தண்ணீர் இறைக்கிறேன்' என்றான் அந்த ஆசாமி.

'உன் கிராமத்து வயலுக்கு......ஏடா? பைத்தியக்காரா! இங்கே தண்ணீர் இறைக்கிறாயா.........இங்கே இறைத்தால் உன் வயல்

எங்கே இருக்கிறது. எங்கோ கிராமத்தில் அங்கு பாயுமா! அட பைத்திய காரா! பைத்யகாரா! என்று பார்ப்பனர் கேலி செய்தனர்.

'மேதாவிகளே! எங்கோ இருக்கும் பிதுர்லோகம் வரையில், நீங்கள் இங்கே இறைக்கும் கங்கா நீர் போகும்போது. நான் இங்கே இறைக்கும் அதே கங்கா ஜலம் மேற்கே உள்ள என் வயலுக்கா பாயாது? என்று கேட்டான் அந்த ஆசாமி பார்ப்பனர்கள்வாயடைத்து நின்றனர். பார்ப்பனரின் சாஸ்திரியமான பைத்தியக்காரத் தனத்தை கண்டு பலரும் கை கொட்டி நகைத்தனர்.

சிந்தித்துப் பாருங்களய்யா. செல்லரித்துப்போன ஏடுகளை சுமந்து கொண்டு அதனாலேயே செருக்கு முற்றி கிடக்கும் சாஸ்திரிகளே!—என்று கூறுவது போல் பார்த்தார், பகுத்தறிவு பேசி பாப்பனர் வாயை அடக்கியவர்,

அவர்தான் சீக்கியர்களின் குரு-குருநானக் என்பவர். இந்துவாகத்தான் பிறந்தார்—பிறகு இந்து மத ஆபாசங்களை அறிந்து, அதைவிட்டு வெளியேறி, சீலம் நிரம்பிய அறிவு மார்க்கத்தைச் சீக்கியருக்கு அளித்தார். குருநானக்கின் வாழ்க்கையிலே நடைபெற்ற சம்பவங்களில் ஒன்றுதான் கங்கை கரையில் கனபாடிகளின் கர்வத்தை அடக்கிய இந்த நிகழ்ச்சி,

—திராவிட நாடு 24—7—1955

---



## வேறுபாடு

ஜனநாயகம் வளர்ந்து முழுமை பெறும்போது கட்சிகளுக்கிடையே காணும் கொள்கை வேறுபாடு சிறுத்து விடும்.

—பேரறிஞர் அண்ணா

# கைதட்டல்

— கவிஞர் நா. முத்துக்குமார் —

அரசியல்வாதியின்
அர்த்தமில்லா பேச்சுக்கு
ஆயிரமாயிரம் அறிவில்லாதோரின்
அற்புத கைதட்டல்!
சினிமாவில் நடிகர் சிறிப்பாய்ந்தால்
ரசிகர் கூட்டத்தின்
ஆனந்த கைத்தட்டல்!
கடைசி கோரத்தில்
கிரிக்கெட் வீரர்
பந்தை பிடித்தால்
இளைஞர் பலரின்
இன்பக் கைத்தட்டல்!
ஆனால்
கட்டிட வேலையில்
மொட்டை மாடியில்
கட்டையில் நின்று
சித்தாள் நாங்கள்
பத்துக் கல்லை ஒன்றாய்
தூக்கிப்போட்டு
பிடிக்கும்போது மட்டும்
ஏன் யாரும் கைதட்டவில்லை?
ஓ..............
பசிஎங்கள் வயிற்றை
எப்போதும்
தட்டிக் கொண்டிருப்பதாலோ?

# பெரியார் புரட்சி மொழிகள்

* மானமும் அறிவும் மனிதனுக்கு அழகு.
* பகுத்தறிவு என்பது மனிதனுக்கு உயிர்நாடி.
* மூட நம்பிக்கையும் குருட்டுப் பழக்கமும் சமூகத்தின் முதல் பகைகள்.
* விதியை நம்பி மதியை இழக்காதே.
* மக்களின் ஒழுக்கத்தையும் மதியையும் கெடுப்பது மது.
* மனிதப் பண்பை வளர்ப்பதே என் வாழ்நாள் பணி.
* பிறருக்குத் தொல்லைத்தராத வாழ்வே ஒழுக்க வாழ்வு.
* பக்தி இல்லாவிட்டால் இழப்பில்லை, ஒழுக்கம் இல்லாவிட்டால் எல்லாம் பாழ்
* தீண்டாமை ஒழிய வேண்டுமானால், சாதி ஒழிய வேண்டும்.

---

## ''அதையே நாங்கள் பேசியிருந்தால்...?''

சென்னை ராணி சீதை ஹாலில் மணவழகர் (திரு வி. க.) முத்தமிழ் விழா நடந்தது.

விழாவில் மூத்த வழக்கறிஞரும் தீவிர காங்கிரஸ்காரருமான செங்கல்வராயன் பேசும்போது, 'மொழி ஆதிக்கத்தை என்றைக்குமே எதிர்ப்பவன் நான். முன்பு இதே பால் இந்தித் திணிப்பு முயற்சி நடந்தபோது உங்களுக்கு இந்தி தேவையா?' இந்தியா தேவையா? என்று பிரதமராக இருந்த இந்திராகாந்தியிடமே கேட்டேன். அவர் எனது வாதத்தை ரொம்பவும் ரசித்துப் பாராட்டினார்' என்றார்.

அடுத்துப் பேசிய திராவிடர் கழகப் பொதுச்செயலாளர் வீரமணி, 'செங்கல்வராயன் ஐயா காங்கிரஸ்காரராக இருந்ததால் அவருடைய இந்தப் பேச்சு—பாராட்டை வாங்கிக் கொடுத்தது. அதையே நாங்கள் சொல்லியிருந்தால் தேச விரோதிகள். பயங்கரவாதிகள் என்ற பட்டங்கள்தான் கிடைத்திருக்கும்!' என்றார்!

—ஜூனியர் விகடன் 6—4—94



217219.

மத்திய மந்திரியிடம் 4 கோரிக்கை :

# தமிழ் இருக்கும் இடத்தில் இந்தியை அனுமதிக்கமாட்டோம!

சவான் முன்னிலையில் கி. ஆ. பெ. பேச்சு

**கி. ஆ. பெ. பேச்சு!**

முத்தமிழ் **காவலர்** கி. ஆ. பெ. விசுவநாதன். மந்திரி சவான் மூலம் மத்திய அரசுக்கு 4 கோரிக்கைகளை வைத்து பேசினார்.

**அவர் பேசியதாவது:**

உலகில் மிகவும் தொன்மையான மொழியான தமிழ் மொழி அழிந்துவிடாமல் பாதுகாக்க வேண்டும். மற்ற மொழி வளர மத்திய அரசு செலவு செய்யும் தொகையில் பாதி அளவாவது தமிழ் மொழி வளர நிதி உதவி செய்ய வேண்டும்.

சித்த மருத்துவம் வளர பரப்ப உதவி செய்ய வேண்டும். திருக்குறளை தேசிய நூலாக்க வேண்டும், தமிழர்களை இந்தி விரோதி என்று நினைக்க வேண்டாம். தமிழ் இருக்கும் இடத்தில் இந்தி உட்கார பார்க்கிறது இதற்கு அனுமதிக்கமாட்டோம். அதனால்தான் இந்தி எதிர்க்கிறோம். இவ்வாறு அவர் பேசினார்.

'தினகரன்'

---

# 4 | 5 | 7 | 10

இந்தோ—ஆரிய மக்களிடம் ஒரு காலத்தில் ஒருத்தி ஒரே சமயத்தில் பலரை மணந்து வாழ்தல் வழக்கில் இருத்தல் வேண்டும் என்பதற்கு மகாபாரதத்தில் வருகின்ற சில செய்திகளே சான்றாகும். பாஞ்சாலி பாண்டவரை மணப்பதற்கு முன்னரே ஜடில கவுதமி என்ற பார்ப்பன மங்கை இருடிகள் எழுவரை மணந்து வாழ்ந்தாள். மரிசா என்பவள் பிரசேதர் பதின்மறை மணந்து வாழ்ந்தாள். யயாதியின் குடும்பத்தில் பிறந்த மாதவி என்பவள் (ஆரிய மாதவி) அரசர் நால்வரை மணந்து வாழ்ந்தாள். மகாபாரத குறிப்புப்படி இப்பழக்கம் ஒரு காலத்தில் பெரு வழக்காக இருந்திருத்தல் வேண்டும் என்பது தெரிகிறது.

—ஆசிரியர் என்.கே.டட்.
இந்திய சாதிகளின் தோற்றமும் வளர்ச்சியும்
—திராவிடநாடு—28—8—55

தமிழை ஆட்சிமொழியாக்க போராட்டம் :

# பெருஞ்சித்திரனார் உள்பட 67 தமிழறிஞர்கள் கைது!

## சட்டசபை முன்முற்றுகை நடத்த சென்றபோது!!

சென்னை ஏப். 19 சட்டசபை முன் முற்றுகை போராட்டம் நடத்தச்சென்ற 67 தமிழ் அறிஞர்கள் கைது செய்யப்பட்டனர்,

**முற்றுகை போர்!**

தமிழ் ஆட்சிமொழி. பயிற்று மொழி கொள்கையில் அ தி.மு.க. அரசு பொய்முகத்துடன் செயல்படுகிறது. இதை முழுமையாக அமுல் படுத்தவில்லை என்று கூறி தமிழறிஞர்கள் சட்டசபை முன் 18—4—94 அன்று முற்றுகை போராட்டம் நடத்தப்போவதாக அறிவித்து இருந்தனர்.

**திரண்டனர்!**

அதன்படி நேற்று (18-ந்தேதி) காலை 10 மணி அளவில் தமிழறிஞர்கள் சென்னை சிம்சன் அருகில் உள்ள பெரியார் சிலை முன் திரண்டனர். அங்கிருந்து சட்டசபைக்கு ஊர்வலமாக செல்ல தயார் ஆனார்கள்.

**67 பேர் கைது!**

தமிழ்பேரவைத் தலைவர் பெருஞ்சித்திரனார், பழனிவேலன் ஆகியோர் தொடக்கவுரை ஆற்றினார்கள். தலைநகர் தமிழ்ச்சங்க பொதுச்செயலாளர் சுந்தரராசன், பொதுச்செயலாளர் புகழேந்தி இரா. சேது, அரு கோபாலன் உள்பட ஏராளமானோர் திரண்டனர். அப்போது போலீசார் தடுத்தனர் மேற்கண்ட தமிழறிஞர்கள் உள்பட 67 பேரை கைது செய்தனர்.

'தினகரன்'

---

## கவிதை

சிந்தித்தால் உரையாற்றலாம். சிந்தித்து நெகிழ்ந்தால் மட்டுமே கவிதை இயற்ற முடியும்,

—பேரறிஞர் அண்ணா

# 'கோயில் கூரை ஆடுகிறது' என 'எத்தர்கள்' புரளி

சென்னையின் புறநகர் பகுதி ஒன்றில் கோயில் கூரை ஆடுகிறது என்று எத்தர்கள் புரளி கிளப்பி விட 'ஏமாளிகள்' இதை நம்பி அந்தக் கோயிலை நோக்கிப் படையெடுத்தனர். இது அம்மன் குத்தம் என்று கதை கட்டி விட்டவர்கள் 'காசு' சேர்க்க ஆரம்பித்து விட்டனர். ஏமாளிகள் காசு கொடுத்து பூசை நடத்திக் கொண்டிருக்கின்றனர். அந்தப் பகுதியை சேர்ந்தவர்கள் 'இந்து' நாளிதழ் நிருபரிடம், காற்று வேகமாக வீசும்போது கூரை ஆடுவதும் அதுபோது கீழே உள்ள சிலையும் பீடமும் ஆடுவதுபோல் ஓர் மாயைத் தோற்றமும் ஏற்படுகிறது என்று கூறினாராம்.

—நன்றி 'இந்து' 23-4-94

**ஆர். குறிப்பு**

படிக்காத, பகுத்தறிவு இல்லாத மக்கள் இதையெல்லாம் நம்புவது பற்றி நமக்கு வியப்பு எழவில்லை. காரணம் அவர்களை ஆண்டு கொண்டிருக்கும் பிரதமர், அமைச்சர்கள், நீதிபதிகள், மருத்துவர்கள் அய்.ஏ.எஸ். ஐ பி.எஸ்' எனும் படித்த பட்டாளமே மடாதிபதிகள் காலில் விழுந்து கொண்டிருக்கும்போது பாவம் படிப்பறிவில்லாத. பகுத்தறிவில்லாத அந்த மக்கள் இப்படித்தான் இருப்பர்.

---

# அய்ந்து ஊர்களில்-நாளை மார்வாடி கடைகள் முன் மறியல்

சென்னை, ஏப். 18-மார்வாடி-குஜராத்தி நிறுவனங்களுக்கு முன்பாக, தமிழ்தேசத் தன்னுரிமை முன்னணி சார்பில் ஏப்ரல் 19-ம் தேதி மறியல் போராட்டம் நடைபெறவிருக்கிறது.

தடுழர் தேசிய இயக்கம், தமிழ் தேசப் பொதுவுடைமைக் கட்சி, தமிழ்-தமிழர் இயக்கம், உழைக்கும், மக்கள் விடுதலை இயக்கம் ஆகியவற்றைச் சேர்ந்த தொண்டர்களும், பல தமிழர் அமைப்புகளைச் சேர்ந்தவர்களும் இம்மறியலில் பங்கேற்கிறார்கள்.

கீழ்க்கண்ட ஊர்களில், கீழ்க்கண்டோர் தலைமையில் மறியம் நடைபெறும்.

### சென்னை

சென்னையில் பழ. நெடுமாறன், பத்மநாபன், தென்னரசன் ஆகியோர் தலைமையில் மறியல்-தொண்டர்கள் வள்ளுவர் கோட்டத்திலிருந்து ஏப். 19 காலை 10 மணிக்கு கிளம்பி, காந்தி சாலையில் உள்ள கோத்தாரி நிறுவனத்தின் முன்பாக மறியல் செய்வார்கள்.

### மதுரை

மதுரையில் - பெ. மணியரசன், சி. சி. சாமி, பரந்தாமன், கருப்பையா, முருகன் ஆகியோர் தலைமையில் மறியல்.

தொண்டர்கள் பெரியார் பேருந்து நிலையத்தின் அருகே உள்ள கட்டபொம்மன் சிலையிலிருந்து புறப்பட்டு, மேலமாசி வீதியில் உள்ள நைலான் எலக்டிரிகல் கடை முன்பாக மறியல் நடைபெறும்.

### தஞ்சை

தஞ்சையில் தியாகு, சி. முருகேசன், வெங்கட்ராமன் ஆகியோர் தலைமையில் மறியல் நடைபெறும்.

### திண்டிவனம்

திண்டிவனத்தில் ராசேந்திர சோழன், செங்குட்டுவன், பழமலை ஆகியோர் தலைமையில் மறியல் நடைபெறும்.

### நெல்லை

நெல்லையில் வியனரசு தலைமையில் மறியல் நடைபெறும்.

தமிழ்த்தேச தன்னுரிமை முன்னணி விடுத்துள்ள அறிக்கையில் இது தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

## சூழ்நிலை

தனிமனிதனது தரமும் பண்பும் மட்டும் போதாது. சமுதாயம் சீர்பட நல்வாழ்வு வாழ மனிதனை மனிதனாக வைத்திடும் சூழ்நிலை மிக மிகத் தேவை.

—பேரறிஞர் அண்ணா

4 எதிர்கட்சிக்கள் அறிவிப்பு

# ஒத்துழையாமை இயககம்! ‘டங்கல்’ திட்டம் எதிர்த்து!!

## இந்தியா முழுவதும் ஆகஸ்டு 9-ல் நடக்கிறது!!

புதுடெல்லி, ஏப்.10-டங்கல் திட்டம் எதிர்த்து ஒத்துழையாமை இயக்கம் நடத்த கம்யூனிஸ்டு உள்பட 4 கட்சிகள் முடிவு செய்து உள்ளன. இந்த போராட்டம் ஆகஸ்டு 9-ந்தேதி நாடு முழுவதும் நடக்கிறது

பிரதமர் நரசிம்மராவ் தலைமையிலான மத்திய அரசு ''டங்கல்'' திட்டத்தை ஆதரிக்கிறது. வருகிற 15 ந் தேதி மொரோக் கோவில் நடக்கும் மாநாட்டில் உலக நாடுகள் இத்திட்டத்தில் கையெழுத்திட உள்ளன,

### கடும் எதிர்ப்பு !

இத்திட்டம் விவசாயிகள் உள்பட அனைத்து தரப்பினரையும் பாதிக்கும் திட்டம் என்று எதிர்க்கட்சிகள் கடும் கண்டனம் தெரிவித்து வருகின்றன. டங்கல் திட்டம் பற்றி பாராளுமன்றத்தில் சிறப்பு விவாதம் நடந்த போதும் எதிர்க்கட்சிகள் தங்கள் கருத்தை வலியுறுத்தின. அதற்கு மத்திய அரசு செவிசாய்க்கவில்லை. டங்கல் ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதை தவிர வேறு வழியில்லை என்று அரசு தரப்பில் விளக்கம் அளிக்கப்பட்டது.

### மாபெரும் போர் !

டங்கல் திட்டத்தை எதிர்த்து நாடு முழுவதும் மாபெரும் போராட்டம் நடத்த இந்திய கம்யூனிஸ்டு, மார்க்சி கம்யூனிஸ்டு, பார்வர்டு பிளாக், ஆர்.எஸ்.பி. ஆகிய கட்சிகள் முடிவு செய்து உள்ளன. சுதந்திர போராட்டத்தின் போது நடந்த ''வெள்ளையனே வெளியேறு' போராட்டத்தைவிட பெரிய அளவில் 'ஒத்துழையாமை இயக்கம்' நடத்த முடிவு செய்துள்ளன. ஆகஸ்டு 9-ந் தேதி இந்த போராட்டம் நடக்கும் என்று தெரிகிறது. அன்று நாடு முழுவதும் இடதுசாரி கட்சி தொண்டர்கள் போராட்டத்தில் கலந்து கொண்டு கைது ஆவார்கள்.

கறுப்பு தினம்

முன்னதாக ஒப்பந்தம் கையெழுத்தாகும் ஏப்ரல் 15-ந் தேதி 'கறுப்பு தினம்' அனுசரிககவும முடிவு செய்துள்ளது.

மேலும் டங்கள் எதிர்ப்பு பிரசாரத்தை தீவிரமாக நடத்துமாறும் அந்த 4 கட்சிகளும் முடிவு செய்து அறிவித்து உள்ளன.

'தினகரன' 10—4—94

---

# புலிகளின் புதிய கப்பல்

விடுதலைம் புலிகளிடம் 5 சரக்குக்கப்பல்களும் 11 சிறிய கப்பல்களும் (வெசல்ஸ்) இருப்பதாகவும்—இது இந்திய புலனாய்வுத் துறையைக் கவலை அடையச் செய்திருப்பதாகவும் 'சண்டே மெயில்' பத்திரிகை செய்தி வெளியிட்டிருக்கிறது! விடுதலைப் புலிகளின் செயல் பாடுகள்பற்றி இந்திய உளவ நிறுவனம் ஒரு டாக்குமெண்டரி படத்தைத் தயாரித்திருப்பதாகவும்—ஒரு மணி நேரம் ஓடக்கூடிய அந்தப் படத்தில் விடுதலைப்புலிகளின் பயிற்சிகள் படமாக்கப்பட்டுள்ள தாகவும் அந்த செய்தி கூறுகிறது விடுதலைப்புலிகள் மிகவும் உறுதியாகவும், வலிமையாகவும் இருக்கிறார்கள் என்றும் புலிப்படையில் 8000 பயிற்சி பெற்ற இளைஞர்கள் இருப்பதாகவும் உளவு நிறுவனத்துக்குக் கிடைத்துள்ள தகவல்கள் கூறுவதாக 'சண்டே மெயில்' எழுதியிருக்கிறது.

'விடுதலை'

---

''அவசரப்படுகிற காங்கிரஸ் நண்பர்களுக்கு அல்லது டில்லி நண்பர்களுக்கு நான் சொல்லிக்கொள்கிறேன். என்னுடைய ஆட்சியை நீங்கள் நீக்கமுடியுமா? என்று சொன்னால் நிச்சயமாக முடியும் உங்களால். அதற்கேற்ற அதிகாரம் உங்களிடம் இருக்கிறது. நீங்கள் நினைத்தால் முடியும். ஆனால் ஒன்று. இந்த ஓராண்டில் என்னுடைய ஆட்சிக் காலத்திலே முப்பெரும் சாதனைகளை நான் செய்திருக்கிறேன் அந்த முப்பெரும் சாதனைகள் என்ன என்று சொன்னால், முதலாவது சாதனை இருக்கிறதே, அந்த சானை என் தாய் திருத்நாட்டுக்கு 'தமிழ் நாடு' என்று பெயர் வைத்தேன். இரண்டாவது, 'சுயமரியதைத் திருமணங்'களுக்கு சட்டவடிவம் கொடுத்தேன். மூன்றாவது இந்திக்கு தமிழ்நாட்டில் இடமில்லை. இருமொழிக் கொள்கைதான் என்பதைத் தெளிவாக ஆக்கி, இந்த மூன்றையும் சட்டமன்றமே எதிர்ப்பின்றி ஏற்கும்படியாகச் செய்திருக்குறேன்'' என்று அவர்கள் சொல்லிவிட்..

ரொம்ப அழகாக, ''இந்த மூன்று செய்தியையும் ஓராண்டு காலத்திலே எங்களுடைய அரசு நிறைவேற்றி இருக்கிறது. எங்களை நீங்கள் ஆட்சியை விட்டு அப்புறப்படுத்தலாம்; நீக்கலாம். எங்களை நீக்கி விட்டு, நாம் செய்யாததை அல்லவா நாம் ஆட்சியில் இல்லாதபோது இந்த அண்ணாதுரை செய்தான், என்று நினைத்து, அண்ணாதுரை செய்ததை எல்லாம் மாற்றவேண்டும் என்று நீங்கள் நினைத்து இவை களை மாற்றலாம் என்று நீங்கள் நினைக்கிற நேரத்தில் உங்களை அறியாமலேயே ஒரு அச்சம். 'அப்படி மாற்றுவிட்டு மக்களைப் பார்க்க முடியுமா? என்று நீங்கள் நினைப்பீர்கள். அய்யய்யோ நமக்கு ஏன் அந்த வீண் வம்பு—உங்களை சந்திக்கமுடியாது. நமக்கு அந்த வீண் வம்பு வேண்டாம் என்ற உணர்வு இருக்கிறதே, அது உங்களை உலுக்கும். இந்த அச்சம் உங்களுக்கு இருக்கிற வரையிலே நான் ஆட்சியிலே இருந்தாலும் இல்லாவிட்டாலும் அண்ணாதுரைதான் இந்த நாட்டை ஆள்கிறான் என்று பொருள்'

அறிஞர் அண்ணா

---

# அண்ணாவின் கருத்து மணிகள்

பெரும் பணம் படைத்தவர்களுடைய வரியைக் குறைத்து சாதாரண மக்களுக்கு வரி ஏற்பட்டு பலதுறைகளில் அவர்களிடம் வரிவசூலிக்கும் வழக்கம் நிறுததப்படவேண்டும். நிறைய பணம் படைத்த பணக்காரர்களுக்கு வரிபோட்டு ஏழைகளுக்கு வரிபோடாமலி ருந்தால் தான் மக்களுடைங் வாங்கும் சக்தி பெருகும்.

தம்பிக்கு 8ம் பகுதி
பக்கம் 58

* * *

தம்பி, இந்த பேச்சுகளிலிருந்து நமக்கு இப்போதே, காங் கிரஸ் கட்சி தி மு.க ஆட்சிக்கு வந்தால் என்ன சொல்வது என்பது குறித்து, சிந்திக்கத் தொடங்கியிருப்பதிலிருந்தே, காங்கிரசுக்கு ஒர் பலமான எண்ணம் கழகம் ஆளுங்கட்சியாகிவிடும் என்ற எண்ணம் வலுத்துக் கொண்டு வருகிறது என்பது புரிகிறதல்லவா!

காஞ்சி 9-8-64

* * *

பெரும் பெரும் நிலப்பிரபுக்கள், கோடிஸ்வரர்களான தொழி லதிபர்களும், வெளிநாட்டு முதலாளிகளுடன் கூட்டாக பெருந்தொழில் நடத்துபவர்களும் காங்கிரசில் கூடிநின்று ஜனநாயக சோஷலி சம் பேசும் இருபதாம் நுற்றாண்டின் இணையிலா அரசியல்

மோசடி என்று நான் சொன்னால் கடுமையாக கூறிவிட்டேன் என்று யாரும் எண்ணிக் கோபிக்கக்கூடாது...... திருடனைக்கூட நடுநிசி உழைப்பாளி என்று கூறத்தயார்!

காஞ்சி 6-9-64

✻ ✻ ✻

என்ன மொழி எரிச்சலூட்டும் எரிச்சல் நம்மைச் சுடுசொல் வீசிடுவோராக்கிவிடும்–சுடுசொல் வீசிடினோ, நாம் சோர்வகல மது அருந்திட முனைவோன் இறுதியில்தானே மதுக்குடமாகிடுதல் போல, சுடுசொல் வீசிட முனைந்துவிட்டால், தெளிவு, கனிவு, அறம், அன்பு நெறி, நேர்மையாவும் பட்டுப்போய்விடும். குறிக்கோள் கெட்டுப் போய்விடும். நாடு நம்மை கைவிட்டு விட்டு, இன்னும் காட்டானசத் தான் இருக்கிறான்! ஆந்தை அலறுவதை ஆயிரம் முறை கேட்டிடினும் குயில் தன் குரலோசையை மாற்றிக் கொள்கிறதா!

காஞ்சி 25-7-64

✻ ✻ ✻

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் ஈராயிரம் ஆண்டுகட்கு முன்பே நமக்கு வள்ளுவர் கூறியுள்ளார். கூறி? ஜாதிகள் இல்லையடி பாப்பா என்று இந்நாளில் பாரதியார் கூறிகாட்ட வேண்டியதாயிற்று அதற்குப்பிறகும், ஜாதிப்பிடிப்பும் பித்தமும் நீங்கிய பாடில்லையே!

பேழையில் பொருளை அடைத்து, பேதையொருவன் அதன் மீதே பட்டினிகிடந்த நிலையில் சாய்ந்திருந்தான். என்றால்—அப்படி ஒருகதை சொன்னால்-வியப்படைகின்றோம் அறிவுப்பேழை இங்கு... ஈராயிரம் ஆண்டுகண்டு முன்பே! எனினும் பேதம், பிளவு, மதியற்ற போக்கு, குருட்டு பிடிவாதம், முரட்டுவாதம், சே!
தப்பி இதனை எண்ணிடும் போது உள்ளபடி வெட்கம் பிலாவினை குத்திடுகிறது

காஞ்சி 14-1-65

---

# பிற்படுத்தப்பட்டவர்கள்

பிற்படுத்தப் பட்டவர்கள் என்றால் கல்வி தொழில் சமுக அந்தஸ்து பொருளாதாரம் அரசு அலுவலகங்களில் இடம் எனும் இவைகளிலெல்லாம் பிற்படுத்தப்பட்டு தாழ் நிலை தரப்பட்டு கவனிபாரற்று ஓரவஞ்சனையாக நடத்தப்பட்டு ஒடுக்கப்பட்டு முல பவர்கள்'.

தப்பிக்கு 3-ம் பகுதி பக்கம் 231,

''இந்தியாவிலிருந்து எவராவது பிரிந்து செல்ல விரும்பினால் 'வேண்டாம்' என்று காங்கிரஸ் அவர்களை வேண்டிக்கொள்ளும் வேண்டிக் கொண்டதற்கு பின்னும் 'பிரிந்துதான் செல்வோம்' என்று சொன்னால் கண்ணியத்தோடு அதை அனுமதித்து விடும்'.

ஸ்ரீ நகரில் இந்திய பிரதமர் பண்டிதர் நேரு பேசியது.
1945-ம் ஆண்டு ஆகஸ்ட்டு 2-ம் தேதி—தம்பிக்கு 30-4-61

✻ ✻ ✻

இந்தியா ஒன்று என்று சமுத்திரகுப்தன் காலத்தில் இல்லை! சந்திரகுப்தன் காலத்தில் இல்லை! அசோகன் காலத்தில் இல்லை! ஹர்ஷர் காலத்தில் இல்லை! கனிஷ்கன் காலத்தில் இல்லை! அக்பர் காலத்தில் இல்லை! அவுரங்க சீப் காலத்தில் இல்லை! அலகாபத் பண்டிதர் காலத்தில் மட்டும் எப்படி இந்தியா ஒன்றாகும்?........

இந்து மதத்தை தழுவியவர்கள் இந்தியா முழுமையும் உள்ளவர்கள்! ஆகவே இந்திய ஒன்றாக இருக்க வேண்டுமென்றால் இஸ்லாம் மதத்தை தழுவியவர்கள். எல்லோரையும் ஓர் அரசின் கீழ் கொண்டுவர இயலுமா? கிருத்துலமதத்தை தழுவியிருக்கின்ற காரணத்தினாலேயே அமெரிக்காவும், இங்கிலாந்தும், பிரான்சும், ஜெர்மனியும் ஓர் ஆட்சியின் கீழ் இருப்பது சாத்தியமாகுமா?'..........

தம்பிக்கு—18-6-61

# அண்ணாவும் பெரியாரும்

இன நலமும் மொழி நலமும் மீள வேண்டும்
இனிய நம் நாட்டை தமிழரே ஆளவேண்டும்
கனிவளமும் கழனி வளமும் கொழிக்க வேண்டும்
மன நலமும் மனித நலமும் செழிக்க வேண்டும்
அண்ணாவும் பெரியாரும் படிக்க வேண்டும்
எந்நாளும் அவர் வழியே நடக்க வேண்டும்
உண்ணாமல் இருந்தாலும் இருந்திடலாம்
அண்ணாவும் பெரியாரும் மனதினிலே
எண்ணாமல் ஒருநாளும் இருக்கவேண்டாம்!
மண்ணாகும் உடலிது மறந்திடலாம்
எண்ணங்களும் ஒருநாள் மரத்திடலாம்
தென்னாட்டின் மன்னவனாம் அண்ணாவை
முன்னாண்ட சேரசோழ பாண்டியராய்
மண்மீது தமிழ்போல் எந்நாளும்
நின்று நிலைப்பார் நினைவில் வாழ்வார்!

—தொ. சானகிராமன் எம்.ஏ., பி.எல்.,
சென்னை-5.

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
217219.

# மடல்கள்

## நேயர் நெஞ்சம்

''காஞ்சி நாடு' முகப்பில் மலர்ந்த
கவிஞர் மீனா சுந்தர் 'கவிதை'
ஆர்ந்த கருத்தோ அருமையிலும் அருமை.
அறிஞர் அண்ணா கூறும் கருத்து
நலத்தைப் போற்றும் வண்ணமாக.
நலமார் கருத்தினை வழங்குகின்ற
பரிமளச் செல்வர் நீட்டும் நல்ல
தெரிமலர்ப் பூவாய், மணந்து மணக்கும்
'காஞ்சி நாடு' என்றும் வரட்டும்,
உகலத்தை வெல்லும் கருத்தைத் தந்தே!

—பாவல்மதி தமிழறிவன் B.Lit

---

## "தலைமை நிலைய நம்நாடு அலுவலகத்தில்"

திரு. இராஜகோபாலாச்சாரியார் முதலமைச்சராக இருந்த போது, குலக்கல்வி திட்டம் கொண்டு வந்தார். அதை எதிர்த்து, போராட்டம் நடத்தியபோது, ஐம்பெரும் தலைவர்கள் கைது செய்யப் பட்டனர். ஜாமீனில் வெளிவந்தனர். அரசாங்கம் வழக்கு தொடுத்து ஐம்பெரும் தலைவர்கள் மீது குற்றச்சாட்டு கொடுத்தது ஐம்பெரும் தலைவர்களில் ஒருவருக்கு குற்றச்சாட்டு புரியவில்லை. அண்ணா விடம் என்ன அண்ணா இப்படி தொடுத்துள்ளார்களே—என்று அவர் கேட்க புரியவில்லையா தம்பி 'நாம் மரத்திலுள்ள மாங்களிமேல் கல் லெறிந்தோம் ஆனால் அது தவறி சென்று—மாங்கனி வழியாக—மாடி மேல் உள்ள மங்கைமேல் பட்டுவிட்டது. மங்கையோடு தன் மேல்தான் கல்யெறிந்ததாக சொல்வதுபோல் உள்ளது. நாம் நம் அதிருப்தியை காட்ட சிறிது நேரம் ரயிலை நிறுத்தினோம். அவர்களோ—நாம் ரயிலை கவிழ்க்க சதி செய்தோம் என்று தொடுத்துள்ளார்கள் என்றார்.

—தொகுப்பு : C. R. கண்ணன்

நன்கொடை ரூ. 3-00 பதிவு எண்: 66/TN/MS(C)1239

காஞ்சி
நாடு

ஊனமுற்று உருக்குலையும் நிலை மாற்ற
குழந்தைகளுக்கு சொட்டு மருந்து
கொடுப்போம்
கொடிய இளம்பிள்ளைவாதம் தடுப்போம்
தாய் சேய் நலம் காப்போம்.

மருத்துவம் மற்றும்
ஊரக நலத்துறை

(குடும்ப நலம்)

தமிழக அரசு

பெறுநர் :
திரு / திருமதி
DIRECTOR
TAMILNADU ARCHIVES
MADRA - 8

விடுநர் :
பேரறிஞர் அண்ணா
இலக்கியப் பேரவை
7. அவின்யு சாலை,
சென்னை-600 034
பேசி: 8278570